கட்டப்படுகின்றனவே தவிர, உல்லாசப் பயணத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு அல்ல. பெரும்பாலும் ஜன சஞ்சாரமற்ற இடமாகக் காட்டை ஆக்குவதுதான் இவ்விலாக்காவின் முக்கிய நோக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *149*, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**149—**

**விரைவுப் பேருந்து**

***25029—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குநேரி தொகுதி, வள்ளியூரிலிருந்து ஏர்வாடி வழியாகச் சென்னைக்கு விரைவுப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது வழித்தடம் எண் *198* எக்ஸ் மூலம் நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு வள்ளியூர், ஏர்வாடி வழியாக இரண்டு பேருந்துகள் *2* ஒருவழிப்பாதைப் பயணமாக இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்து வசதியை வள்ளியூர், ஏர்வாடி பயணிகள் பயன்படுத்திக்கொள்ள வசதியாக உள்ளதாலும், இவ்வழித்தடத்தில் பயணிகள் அடர்வு மிகவும் குறைவாக உள்ளதாலும், வள்ளியூரிலிருந்து சென்னைக்கு ஏர்வாடி வழியாக விரைவுப் பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வள்ளியூரிலிருந்து ஏர்வாடி *6* கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதால் ஏர்வாடி மக்கள் வள்ளியூர் வந்து நாகர்கோவில்-சென்னை வழித்தடத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். நாகர்கோவில், கன்னியாகுமரியிலிருந்து வருகின்ற பேருந்துகளில் சில நேரங்களிலே

*2000 மார்ச் 30]*

வள்ளியூர் பகுதியில் ஏறுகின்ற மக்களுக்கும் ஏர்வாடி பகுதியிலே ஏறுகின்ற மக்களுக்கும் இடம் இல்லாமல் இருக்கின்ற நிலை ஏற்படுகிறது. மேலும், பொருட்களை அவர்கள் அங்கும் இங்குமாக எடுத்துச் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, மக்களுக்கு வசதியாக வள்ளியூரிலிருந்து புறப்பட்டு ஏர்வாடி வழியாக சென்னைக்கு வருவதற்கு ஒரு பேருந்தை ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து மக்களுக்குப் பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளியூருக்கும் நாகர்கோவிலுக்கும் இடையே உள்ள தூரம் 33 கிலோ மீட்டர்தான். அதுவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல வள்ளியூரிலே அந்த அளவிற்கு அடர்வு இருப்பதாகவும் தெரியவில்லை. உதாரணமாக, 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே வள்ளியூரிலிருந்து சென்னைக்குப் பயணம் செய்த பயணிகளினுடைய எண்ணிக்கை 6 பேர்தான்; ஒரு மாதம் முழுவதும். அப்படி இருக்கையிலே வள்ளியூரிலிருந்து தனியாகச் சென்னைக்கு பேருந்துகள் இயக்குகிற சாத்தியக்கூறுகள் பொருளாதார ரீதியாகவும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரச்சித்தவுவரியிலிருந்து, வரதனூரி, இடையங்குடி, திசையன்விளை வழியாக ஒரு விரைவுப் பேருந்து விடுவதற்கு........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வள்ளியூர் என்ற காரணத்தால் உங்களைத் துணைக் கேள்வி கேட்க அனுமதித்தேன். நீங்கள், வேறு எதையோ கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்.

**திரு. மு. அப்பாவு:** திசையன்விளை, வள்ளியூர் வழியாக ஒரு விரைவுப் பேருந்து விடுவதாக ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார்கள். துறையிலேயும் அதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு, விரைவிலேயே பேருந்தை விடுவதாக உறுதி

[2000 மார்ச் 30

அளிக்கப்பட்டும் இன்னும் அந்தப் பேருந்து விடப்படவில்லை. ஆகவே, கடற்கரை கிராமமான சுயம்புலிங்க சுவாமி இருக்கின்ற, கரச்சித்தவுவரி, புனித அந்தோணியார் ஆலயம் இருக்கின்ற வரதனூரி வழியாக, திசையன்விளை, வள்ளியூர் வழியாக சென்னைக்கு விரைவுப் பேருந்து விடப்படுமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த சாத்தியக்கூறுகளை பொருளாதார ரீதியாக ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழித்தடங்களிலே செல்கின்ற பேருந்துகள், நாகர்கோவிலிலிருந்து நாங்குநேரி, திருநெல்வேலி வழியாக சென்னைக்கு வருகிறது. நாகர்கோவிலிலிருந்து நாங்குநேரிக்கு பை-பாஸ் வழியில் சென்று விடுவதால், பக்கத்து ஊர்களுக்குப் பலன் இல்லை. ஆகவே, சில வழித் தடங்களையாவது, நாகர்கோவிலிலிருந்து வருகிறபோது வள்ளியூர், ஏர்வாடி, திருக்குறுங்குடி, களக்காடு, சேரன்மகாதேவி, தலைவர் அவர்களுக்கு விருப்பமுள்ள செவல், பாளை, நெல்லை வழியாக சென்னைக்குச் செல்ல, சில வழித் தடங்களை மாறுதல் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதுபோல ஏர்வாடி வழியாக இரண்டு பேருந்துகள் சென்னையிலிருந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமின்றி கன்னியாகுமரி-சென்னைக்கு 18 பேருந்துகள், நாகர்கோவில்-சென்னைக்கு 24 பேருந்துகள், மார்த்தாண்டம்-சென்னைக்கு 18 பேருந்துகள், திருவனந்தபுரம்-சென்னைக்கு 18 பேருந்துகள், திருநெல்வேலி-சென்னைக்கு 20 பேருந்துகள் மொத்தம் 98 நடைகள் இந்த வழியாக, வள்ளியூர் வழியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே வள்ளியூர் வழியாக அதிகமாகப் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அங்கே மேலும் அதிகமான பேருந்துகள் விடுவதற்கான சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை.